DEPOSITION OF WITNESS
(Chapter XXII code of criminal procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE
C.C.No.540/2024
Deposition of Witness for L.W.3 / P.W.3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜேந்திரன் | | | |
| Father's Name | : | முருகன் | Occupation | : | பழக்கடை |
| Village | : | காந்தி நகர் | | | |
| District | : | ஈரோடு | Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.06.2026**
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.
**எதிரி ஆஜரில் உள்ளார்.**
**முதல் விசாரணை:**

நான் தற்போது காந்திநகர், ஓங்காளியம்மன் கோவில் வீதியில் குடியிருந்து வருகிறேன். பழ வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 14.02.2022 ஆம் தேதி இரவு 08.00 மணிக்கு நான் சமயபுரம் கோயில் முன்புள்ள அர்ஜுனன் என்பவரது வீட்டின் முன்பு எனது தள்ளுவண்டி கடையில் பழ வியாபாரம் செய்து கொண்டிருந்தேன். அப்போது என்னுடன் பிரபு, கொடியரசு ஆகியோர் என்னிடம் வியாபாரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.மூர்த்தி என்பவர் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் இடது புறமாக நடந்து சென்று கொண்டிருந்தார். அதே திசையில் ஆஜர் எதிரி (சாட்சி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள நபரான எதிரி தங்கவேல் என்பவரை அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கிறார்) அவருடைய ஆட்டோவை வேகமாக ஓட்டிக்கொண்டு வந்துசமயபுரம் கோயில் முன்புள்ள வாசல் அருகில் மூர்த்தி வந்த போது மூர்த்தி மீது மோதி விட்டார். மூர்த்திக்கு

தலையில் அடிபட்டு இருந்தது. நாங்கள் அவருக்கு முதல் உதவி செய்து அங்கு வந்த ஆம்புலன்ஸ் மூலம் அவரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் போலீசார் ஆட்டோவை காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகவில்லை, குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும், குறுக்குவிசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது)**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.